**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:02.02.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடுவேளாண்மைப்பல்கலைக்கழகம் பல்வேறு வேளாண் விஞ்ஞானிகளுக்கான-காற்று வேதி மூலக்கூறுகள்(Volatilomics) மூலம் பசுமையான எதிர்காலத்திற்காக நுண்ணுயிர்கள் மற்றும் தாவரங்களுக்கிடையேயான தொடர்பு மற்றும் அதன் அழுத்தக்காரணிகள் மேலாண்மை குறித்த குறுகிய கால பயிற்சி**

இந்தியவேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஆதரவில் காற்றுவேதி மூலக்கூறுகள் - நுண்ணுயிர் - பயிர்த் தொடர்பு மற்றும் வறட்சிமேம்பாடு போன்றஉத்திகளின் வாயிலாக பசுமையான பங்களிப்பை அளிப்பதற்காக நமது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் நுண்ணுயிரியல் துறையில் உள்ள கருத்தரங்கில் குறுபாடப் பயிற்சி தொடக்கவிழா பிப்ரவரி 1.1.24 அன்று காலை 9 மணியளவில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் உ. சிவக்குமார் (வேளாண் நுண்ணுயிரியல் துறை) வரவேற்உரையாற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து வருகை புரிந்த அனைவரையும் கௌரவித்தார். இதைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதியிலிருந்து வந்திருந்த 14 பங்கேற்பாளர்கள், தங்களைப் பற்றி சுய அறிமுகம் செய்துகொண்டதோடு இக்குறுகியகாலப் பயிற்சியில் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினர். அதன் பின்னர் இயற்கை வளவேளாண்மை இயக்குநர் முனைவர்.பாலசுப்ரமணியம் அவர்கள் சிறப்புரையாற்றி வேளாண் நுண்ணுயிரியல் துறையின் அத்தகைய வியத்தகு பங்களிப்பைப் பாராட்டினர். மேலும் இந்தசிறப்பு நிகழ்வில் மாண்புமிகுசிறப்பு விருந்தினர் முனைவர். தமிழ்வேந்தன் (பதிவாளர்) அவர்கள் குறும்பாடப் பயிற்சி கையேட்டை வெளியிட்டு விழா தொடக்க உரையாற்றினார். மேலும் தாவர நுண்ணுயிர தொடர்பு பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகளுக்காக நுண்ணுயிரியல் துறையைப் பாராட்டியதுடன் அதிக எண்ணிக்கை மற்றும் அதிகதாக்கம் கொண்ட வெளியீடுகளை முன்னிலைப் படுத்தினார். நிகழ்ச்சியின் இறுதி நிகழ்வாக முனைவர். இரா. ஆனந்தம் (இணைப் பேராசிரியர்) தொடக்க விழாவை வெற்றிகரமாக முடிக்கச் செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சயில் மண்ணியல் துறை, சுற்றுச்சூழல் துறையை சார்ந்த விஞ்ஞானிகள், மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**